**சுருக்கம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) – திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் மற்றும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 18 கிராம ஊராட்சிகளை திருவண்ணாமலை நகராட்சியுடன் இணைத்து திருவண்ணாமலை மாநகராட்சியாக தரம் உயர்த்தி மறுசீரமைப்பு செய்து அரசாணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டது – துரிஞ்சாபுரம் மற்றும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 18 கிராம ஊராட்சிகளை நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து ஆணை மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) பிரிவு 15, உட்பிரிவு (4)(i)-ன்படி அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி [பரா-2(1)]த் துறை**

அரசாணை (நிலை) எண்.68

நாள்: 13.03.2026.
விசுவாவசு, மாசி – 29,
திருவள்ளுவர்ஆண்டு 2057.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண் 103, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 10.08.2024.
2. தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 257, நாள் 10.08.2024.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.69023/2023/ப.ரா.1.1, நாள் 05.03.2026.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து துர்க்கை நம்மியந்தல் கிராம ஊராட்சி மற்றும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஆடையூர், அடிஅண்ணாமலை, ஆணாய்பிறந்தான், அத்தியந்தல், சின்னகாங்கேயனூர், தேவனந்தல், ஏந்தல், கனந்தம்பூண்டி, கீழ்கச்சிராப்பட்டு, மலப்பாம்பாடி, மேலதிக்கான், நல்லவன்பாளையம், நொச்சிமலை, சாவல்பூண்டி, சோ.கீழ்நாச்சிப்பட்டு, தென்மாத்தூர் மற்றும் வேங்கிக்கால் கிராம ஊராட்சிகள் ஆகமொத்தம் 18 கிராம ஊராட்சிகளை

திருவண்ணாமலை நகராட்சியுடன் இணைத்து திருவண்ணாமலை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட 10.08.2024–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 1 கிராம ஊராட்சியும் மற்றும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 17 கிராம ஊராட்சிகள் ஆகமொத்தம் 18 கிராம ஊராட்சிகளை திருவண்ணாமலை நகராட்சியுடன் இணைத்து திருவண்ணாமலை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, மேலே 1 மற்றும் 2–ல் படிக்கப்பட்ட ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டு, அதன்படி 10.08.2024 அன்று மேற்குறிப்பிட்ட 18 கிராம ஊராட்சிகள் திருவண்ணாமலை நகராட்சியுடன் இணைத்து திருவண்ணாமலை மாநகராட்சின் கீழ் செயல்பட்டு வருகிறது எனத் தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் பெயர் |
|---|---|---|---|
| 1 | திருவண்ணாமலை | துரிஞ்சாபுரம் | துர்க்கை நம்மியந்தல் |
| 2 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | ஆடையூர் |
| 3 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | அடிஅண்ணாமலை |
| 4 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | ஆணாய்பிறந்தான் |
| 5 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | அத்தியந்தல் |
| 6 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | சின்னகாங்கேயனூர் |
| 7 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | தேவனந்தல் |
| 8 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | ஏந்தல் |
| 9 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | கனந்தம்பூண்டி |
| 10 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | கீழ்கச்சிராப்பட்டு |
| 11 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | மலப்பாம்பாடி |
| 12 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | மேலதிக்கான் |
| 13 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | நல்லவன்பாளையம் |
| 14 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | நொச்சிமலை |
| 15 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | சாவல்பூண்டி |

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் பெயர் |
|---|---|---|---|
| 16 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | சோ.கீழ்நாச்சிப்பட்டு |
| 17 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | தென்மாத்தூர் |
| 18 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | வேங்கிக்கால் |

3. மேலும், மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்குறிப்பிட்டுள்ள 18 கிராம ஊராட்சிகள் திருவண்ணாமலை நகராட்சியுடன் இணைக்கப்பட்டதை தொடர்ந்து துரிஞ்சாபுரம் மற்றும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நீக்கம் செய்த துர்க்கை நம்மியந்தல், ஆடையூர், அடிஅண்ணாமலை, ஆணாய்பிறந்தான், அத்தியந்தல், சின்னகாங்கேயனூர், தேவனந்தல், ஏந்தல், கனந்தம்பூண்டி, கீழ்கச்சிராப்பட்டு, மலப்பாம்பாடி, மேலதிக்கான், நல்லவன்பாளையம், நொச்சிமலை, சாவல்பூண்டி, சோ.கீழ்நாச்சிப்பட்டு, தென்மாத்தூர் மற்றும் வேங்கிக்கால் கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் திருவண்ணாமலை மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வருகிறது எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் மேற்காண் அரசாணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை நகராட்சியுடன் இணைக்கப்பட்ட 18 கிராம ஊராட்சிகளை துரிஞ்சாபுரம் மற்றும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி ஆணை மற்றும் அறிவிக்கை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, மேலே 1 மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கையில் திருவண்ணாமலை மாவட்டத்தில், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து துர்க்கை நம்மியந்தல் கிராம ஊராட்சி மற்றும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஆடையூர், அடிஅண்ணாமலை, ஆணாய்பிறந்தான், அத்தியந்தல், சின்னகாங்கேயனூர், தேவனந்தல், ஏந்தல், கனந்தம்பூண்டி, கீழ்கச்சிராப்பட்டு, மலப்பாம்பாடி, மேலதிக்கான், நல்லவன்பாளையம், நொச்சிமலை,

சாவல்பூண்டி, சோ.கீழ்நாச்சிப்பட்டு, தென்மாத்தூர் மற்றும் வேங்கிக்கால் ஆகிய 17 கிராம ஊராட்சிகள் திருவண்ணாமலை நகராட்சியுடன் இணைக்கப்பட்டதால் மேற்குறிப்பிட்ட 18 கிராம ஊராட்சிகளை துரிஞ்சாபுரம் மற்றும் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து ஆணை மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு–15, உட்பிரிவு (4)(i)–ன்படி அறிவிக்கை வெளியிட அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணையினைத் தொடர்ந்து, 13.03.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பின்னிணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகளை (I & II) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75
( 13.03.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிட)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக).

**நகல்**

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

# APPENDIX
## NOTIFICATION – I

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of declaration of Thurinjapuram Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local area comprised in the Durgainammiyandal Village Panchayat from the Thurinjapuram Panchayat Development Block in Tiruvannamalai District, consequent on their inclusion within the Tiruvannamalai City Municipal Corporation by Municipal Administration and Water Supply Department vide Notification No.II(2)/MAWS/743(a-2)/2024, published at page 2 of Part-II-Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 10th August 2024.

2. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer.

13/3/2026

## அறிவிக்கை – I.

1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (i)–ஆம் கூறில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மேலும் அதே பிரிவின் உட்பிரிவு (3)–இன்படி, துரிஞ்சாபுரம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்யும் வகையில், துர்க்கை நம்மியந்தல் கிராம ஊராட்சி திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைத்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அறிவிக்கை எண். II(2)/ந.நி(ம)கு.வ./743(a–2)/2024, 10 ஆகஸ்ட் திங்கள் 2024, தேதியிட்ட <u>தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில்</u> பக்கம் 2, பகுதி II – பிரிவு 2 மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டதின் காரணமாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள துரிஞ்சாபுரம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து துர்க்கை நம்மியந்தல் கிராம ஊராட்சியின் உள்ளூர் பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் நீக்குகிறார்.

2. மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

ம.தீ. நேசமணி
பிரிவு அலுவலர்

## NOTIFICATION – II.

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of declaration of Tiruvannamalai Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas comprised in the Village Panchayats specified below, from the Tiruvannamalai Panchayat Development Block in Tiruvannamalai District, consequent on their inclusion within the Tiruvannamalai City Municipal Corporation by Municipal Administration and Water Supply Department vide Notification No.II(2)/MAWS/743(a-2)/2024, published at page 2 of Part-II-Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 10th August 2024.

2. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayats.**

(1) Adaiyur.
(2) Adiannamalai.
(3) Anaipiranthan.
(4) Athiyanthal.
(5) Chinnakangianur.
(6) Devanandhal.
(7) Endal.
(8) Kanathampoondi.
(9) Kilkatchirapattu.
(10 Malappambadi.
(11 Melathikkan.
(12 Nallavanpalayam.
(13 Nochimalai.
(14 Savalpoondi.
(15 So.Kilnatchipattu.
(16 Thenmattur.
(17 Vengikkal.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer

## அறிவிக்கை – II.

1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (i)–ஆம் கூறில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மேலும் அதே பிரிவின் உட்பிரிவு (3)–இன்படி, திருவண்ணாமலை ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்யும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளை திருவண்ணாமலை மாநகராட்சியுடன் இணைத்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அறிவிக்கை எண்.II(2)/ந.நி(ம)கு.வ./743(a–2)/2024, 10 ஆகஸ்ட் திங்கள் 2024, தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பக்கம் 2, பகுதி II – பிரிவு 2 மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டதின் காரணமாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சியின் உள்ளூர் பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் நீக்குகிறார்.

2. மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சியின் பெயர்**

(1) ஆடையூர்.
(2) அடிஅண்ணாமலை.
(3) ஆணாய்பிறந்தான்.
(4) அத்தியந்தல்.
(5) சின்னகாங்கேயனூர்.
(6) தேவனந்தல்.
(7) ஏந்தல்.
(8) கனந்தம்பூண்டி.
(9) கீழ்கச்சிராப்பட்டு.
(10) மலப்பாம்பாடி.
(11) மேலதிக்கான்.
(12) நல்லவன்பாளையம்.
(13) நொச்சிமலை.
(14) சாவல்பூண்டி.
(15) சோ.கீழ்நாச்சிப்பட்டு.
(16) தென்மாத்தூர்.
(17) வேங்கிக்கால்.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

H. தீ. [signature]
பிரிவு அலுவலர்

13/3/2026.